# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | C.C.No.142/2017 |
| preliminary Register | : | |
| Sessions | : | |
| DEPOSITION OF WITNESS for | Prosecution<br>Defence<br>Court | அ.சா.7 |
| Name : | | **மும்தாஜ்பேகம்** |
| Father's/Husband Name: | | க/பெ அப்துல்லத்தீப் |
| Village : | | தொண்டமாந்துறை |
| Taluk : | | வேப்பந்தட்டை |
| Age : | | 59/2020 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 13.02.2020

முதல் விசாரணை

நான் தொண்டாந்துறை கூட்டுறவு வங்கியில் உறுப்பினராக வேலை பார்த்து வருகிறேன். வரவு செலவு கணக்கு வைத்து உள்ளேன். என்னுடைய வங்கி கணக்கில் எனது அனுமதி இல்லாமல் தவறான முறையில் எனது அக்கவுண்டில் எனது பெயரை தவறாக உபயோகித்து மோசடியாக பணத்தை எடுத்து உள்ளார்கள். இது சம்மந்தமாக என்னை காவல் துறையில் இருந்து விசாரித்தார்கள். விசாரித்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். எனக்கும் இந்த மோசடிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. முதல் தடவை ரூ.3000/—மும், 2வது முறை ரூ.20,000/—மும் மூன்றாம் முறை ரூ.9,000/—மும் என்னுடைய பணத்தை எடுத்து உள்ளார்கள். என்னை போலீசார் விசாரித்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் சேவிங்ஸ் டெப்பாசிட் அக்கவுண்ட் மற்றும் அதன் விண்ணப்பங்கள் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். சேமிப்பு கணக்கில் இருந்து பணம் பெறுவதற்கான விண்ணப்பங்கள் அது **அ.த.சா.ஆ.23—ஆக குறியீடு** செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை

ஆஜர் எதிரியின் வழக்கறிஞரை அழைத்தும் ஆஜர் இல்லை. எதிரிகளை வினாவியபோது குறுக்கு விசாரணை மேற்கொள்ளவில்லை என கூறினார்.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | C.C.No.142/2017 |
| preliminary Register | : | |
| Sessions | : | |
| DEPOSITION OF WITNESS for | Prosecution<br>Defence<br>Court | அ.சா.8 |
| Name : | | **அப்துல் லத்தீப்** |
| Father's/Husband Name: | | அப்துல் காதர் |
| Village : | | தொண்டமாந்துறை |
| Taluk : | | வேப்பந்தட்டை |
| Age : | | 70/2020 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 13.02.2020

முதல் விசாரணை

நான் 30 வருடங்களாக கூட்டுறவு சங்கத்தில் வரவு செலவு செய்து வருகிறேன். என்னுடைய அனுமதி இல்லாமல் 97—98ல் மூன்று சலான் ரூ.5,500/— ரூ.10,000/— மற்றும் ரூ. ரூ.10,000/—த்தை தலைவர் செல்லபிள்ளை என்பவர் எனத அக்கவுண்ட்டில் இருந்து பணத்தை எடுத்துவிட்டார். ஆஜர் எதிரிகள் மூவரையும் தெரியும். அங்கு உள்ளவர்கள்தான் பொறுப்பு. கூட்டுறவு அதிகாரி மற்றும் போலீசார் வந்து என்னை விசாரித்தார்கள். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் சலானில் என்னிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டு மேற்படி அந்த சலானில் தனக்கு வேண்டிய ரூபாயை நிரப்பி மோசடியாக பணம் என் அக்கவுண்டில் இருந்து எடுத்து உள்ளனர். அது **அ.த.சா.ஆ. 24—ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை

ஆஜர் எதிரியின் வழக்கறிஞரை அழைத்தும் ஆஜர் இல்லை. எதிரிகளை வினாவியபோது குறுக்கு விசாரணை மேற்கொள்ளவில்லை என கூறினார்.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | C.C.No.142/2017 |
| preliminary Register | : | |
| Sessions | : | |
| DEPOSITION OF WITNESS for | Prosecution<br>Defence<br>Court | அ.சா.9 |
| Name : | | **தமிழ்செல்வி** |
| Father's/Husband Name: | | க/பெ சந்திரன் |
| Village : | | தொண்டமாந்துறை |
| Taluk : | | வேப்பந்தட்டை |
| Age : | | 52/2020 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 13.02.2020

முதல் விசாரணை

ஆஜர் எதிரிகளை தெரியும். என்னுடைய அக்கவுண்ட்டில் உள்ள பணம் கம்மியாக இருந்தது ஆனால் ரூ.3000/– போட்டு எடுத்து உள்ளார்கள். என்னுடைய அக்கவுண்ட்டில் வெறும் ரூ.163/– மட்டுமே இருந்தது. இது சம்மந்தமாக கூட்டுறவு அதிகாரிகள் மற்றும் போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை

ஆஜர் எதிரியின் வழக்கறிஞரை அழைத்தும் ஆஜர் இல்லை. எதிரிகளை வினாவியபோது குறுக்கு விசாரணை மேற்கொள்ளவில்லை என கூறினார்.